பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 09 2026 WEDNESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால மக்கள் சேவையை போற்றும் வகையில் நடைபெறும் சேவை இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- சூரியனின் புறஊதா கதிர்களின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதில் ஓஸோன் படலம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.
- மஹாராஷ்ட்ராவில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 750 கோடி ரூபாய் வட்டியில்லா கடனுதவி வழங்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மெக்கா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய ட்ரோன் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக சௌதி அரேபியா தெரிவித்துள்ளது.
- வியட்நாம் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அதர்வா ஷர்மா – ஜப்பானின் Ryuki Matsuda இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

-----------

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால மக்கள் சேவையை போற்றும் வகையில் நடைபெறும் சேவை இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள காணொளி பதிவில், இதனையொட்டி, நாளை தொடங்கி ஒரு மாத காலம் சேவை மாதமாக கடைபிடிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

-----------

உலக ஓஸோன் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் முக்கியப்பங்கு வகிக்கும் ஓஸோன் படலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், உலகமெங்கும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

“புவி வெப்பமயமாதலை குறைப்பதற்கான நடவடிக்கைகள்” என்பது இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

-----------

இதனிடையே, இந்நாளையொட்டி, மத்திய சுற்றுச் சூழல்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், சூரியனின் புறஊதா கதிர்களின் தாக்கத்திலிருந்து உயிரினங்களை பாதுகாப்பதில் ஓஸோன் படலம் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

ஓஸோன் படலத்தை பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் பங்காற்ற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

வீடுகளில் குளிர்சாதன கருவியை 24 டிகிரி செல்சியஸில் வைக்க வேண்டும் என்றும் கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையிலான உபகரணங்களை பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு ஓஸோன் படலம் முக்கியப்பங்கு வகிப்பதாகவும் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

-----------

ராணுவ தளபதி ஜெனரல் Dhiraj Seth இன்று ரஷ்யா செல்கிறார்.

அவரது மூன்று நாள் பயணத்தின் போது, ரஷ்ய ராணுவ தலைமை கமெண்டர் கர்னல் ஜெனரல் Andrei Nikolayevich-வுடன் இரு நாடுகளுக்கிடையேயான ராணுவ ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

இதுகுறித்து, பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜெனரல் Dhiraj Seth, மாஸ்கோவில் உள்ள தேசிய ராணுவ கட்டுப்பாட்டு மையத்தில் அந்நாட்டு பாதுகாப்பு துணை அமைச்சர் Osmakov உள்ளிட்டோருடனும் ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

-----------

நாட்டின் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் 550 கோடி டாலர் அளவிற்கு அதிகரிக்கும் என்று தோல் ஏற்றுமதி கவுன்சில் தலைவர் திரு. Ramesh Kumar Juneja தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய யூனியனுடனான தடையில்லா வர்த்தக ஒப்பந்தங்கள் காரணமாக ஏற்றுமதி அதிகரிக்கும் என்று கூறினார்.

அடுத்த இரண்டரை ஆண்டுகளில், பிரிட்டனுக்கான, இந்தியாவின் ஏற்றுமதி 100 கோடி டாலர் அளவுக்கு அதிகரிக்கும் என்றும் திரு. Ramesh Kumar Juneja நம்பிக்கை தெரிவித்தார்.

-----------

உத்திரபிரதேச மாநிலம், அயோத்தியில் தேசிய பாதுகாப்பு படையின் மண்டல மையம் அமைப்பதற்கு இலவசமாக நிலம் வழங்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த மையத்தை அமைப்பதற்காக அம்மாவட்டத்தில் உள்ள Milkipur-ல் 65 ஏக்கர் நிலம் வழங்க முடிவெடுக்கப்பட்டது.

அயோத்தி ராமர் கோவிலுக்கு, லட்சக்கணக்கான பக்தர்களும், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வருகைதரும் நிலையில், அங்கு பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் இந்த மையம் செயல்படும் என்று அம்மாநில அமைச்சர் திரு. Suresh Khanna செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அயோத்தியில் நிரந்தரமாக தேசிய பாதுகாப்பு படையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்துவதற்கு இந்த மையம் உதவும் என்று அவர் கூறினார்.

-----------

மஹாராஷ்ட்ராவில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 750 கோடி ரூபாய் வட்டியில்லா கடனுதவி வழங்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சர்க்கரை ஆலைகள் பெறும் கடனுக்கான வட்டியை அரசே செலுத்தும் என்று முடிவெடுக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கடனுதவி மூலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கரும்பை கொள்முதல் செய்து மீண்டும் சர்க்கரை உற்பத்தியை தொடங்க முடியும் என்று தெரிவித்தார்.

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு, அரசு கொள்முதல் செய்த கரும்புக்கு 99 புள்ளி ஐந்து சதவீதம் வரை நியாயமான விலை வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறினார்.

-----------

மேற்குவங்க மாநிலத்தில் உடான் திட்டத்தின் கீழ், 4 விமான நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

Chharra, Balurghat, Hasimara, Kalaikunda ஆகிய இடங்களில் இந்த விமான நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக, மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளன.

வரும் 23ஆம் தேதி Sabhaghar-ல் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

இந்த விமான நிலையங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அடிப்படை கட்டுமான பணிகளை மாநில அரசு மேற்கொள்ளும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-----------

தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நபார்டு சார்பில் இ-ஆட்டோ ஓட்டுவதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இந்த 45 நாள் பயிற்சி தங்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருந்தது என்று பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

-----------

இந்தியா - அமெரிக்கா இடையேயான ராணுவப் கூட்டுப் பயிற்சி உத்ராகண்டின், Chamoli மாவட்டத்தில் நடைபெற்றது.

அப்பகுதியில் உள்ள Auli பயிற்சி மையத்தில் இருநாடுகளிலுமிருந்து தலா 600 வீரர்கள் இதில் கலந்து கொண்டனர்.

மலைப்பகுதிகளில் பயிற்சிகளை மேற்கொண்டு, ராணுவ வீரர்களின் திறன்களை மேம்படுத்த இந்த கூட்டுப் பயிற்சி உதவுகிறது.

-----------

மெக்கா மீதான, ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ட்ரோன் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக சௌதி அரேபியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய, சௌதி ராணுவச் செய்தி தொடர்பாளர், மேஜர் ஜெனரல் *Turki Al-Maliki* மெக்கா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் இரண்டாவது தாக்குதல் முயற்சி இது என்று கூறியுள்ளார்.

சௌதி அரேபியா மீதான தாக்குதலை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே, மெக்கா மீது தாக்குதல் நடத்த முயற்சித்ததாக கூறும் சௌதி அரேபியாவின் குற்றச்சாட்டை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மறுத்துள்ளனர்.

-----------

நேபாளத்தின் *Mugu* மாவட்டத்தில் இன்று அதிகாலை நிலநடுக்கம் நேரிட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 4 புள்ளி 5 ஆக பதிவானது.

-----------

வியட்நாமில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அதர்வா ஷர்மா – ஜப்பானின் *Ryuki Matsuda* இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் *Derepasko-* கஜகஸ்தானின் *Garigoriy Lomakin* இணையை வென்றது.

----------

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-2, 7-6 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் *Zaharije Zak*-ஐ வென்றார்.

>>>>>>>END<<<<<<<